# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 9479 / விசாரணை / 2009**

**விசாரணை நடைபெற்ற நாள் 24.09.09.**

| | |
|---|---|
| முன்னிலை : | திரு.தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் : | திரு. வி. அன்பழகன்,<br>தலைமை நிருபர் தினகரன்,<br>புது எண்.6, பழைய எண். 62,<br>மல்லியம் நரசிம்மன் நகர்,<br>பூந்தமல்லி,<br>சென்னை– 600 056. |
| பொது அதிகார அமைப்பு : | பொதுத் தகவல் அலுவலர்,<br>மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம்,<br>சேப்பாக்கம்,<br>சென்னை– 600 005. |

-------

மனுதாரர் திரு. வி. அன்பழகன் மற்றும் திருமதி. எம். ரங்காபாய், உதவி ஆணையர்–II, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகம், சென்னை இவ்வாணையத்தில் இன்று (24.09.09) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தார்.

மனுதாரர் 11.03.09 அன்று 8 இனங்களில் தகவல்கள் கேட்டு பொதுத் தககல் அலுவலரிடம் மனு செய்துள்ளார். 08.04.09 அன்று மனுதாரருக்கு தகவல்கள்

தரப்பட்டுள்ளன. மனுதாரர் 21.04.09 அன்று இவ்வாணையத்திற்கு அனுப்பிய மேல்முறையீட்டில் முழுத் தகவலும் தரப்படவில்லை என்றும், சில விவரங்கள் தொகுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள மனு இன்று (24.09.09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் சில இனங்களுக்கு தகவல்கள் தரப்பட்டதாகவும், சில இனங்களுக்கு தகவல் தொகுக்கப்பட வேண்டியவை , இவை தகவல் ஆகாது என்று தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். இது குறித்து பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய விவரங்கள் ஒரு சில ஆணைகளில் இருப்பதாக தெரிவித்தார். ஒவ்வொரு இனமாக தகவல் தரப்பட்டது குறித்து விசாரிக்கப்பட்டதில் இனம் 1, 2 மற்றும் 3–க்கு முழுத் தகவலும் வழங்கப்பட்டதாக விசாரணையில் முடிவு செய்யப்பட்டது. இனம் 4 முதல் 8 வரை தகவல் தொகுக்கப்பட வேண்டியவை, ஆகவே இவை தகவல் ஆகாது என்றும் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது, தகவல் இருந்தும் மறுக்கப்பட்டதாக முடிவு செய்து கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

1) மனுதாரர் கேட்டுள்ள இனம் 4 முதல் 8 வரை உரிய தகவலை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் மனுதாரருக்கு அளித்து அதன் விவரத்தை இவ்வாணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

2) மனுதாரர் மனுவிற்கு உரிய தகவலை தராமலும், உரிய தகவல் இருந்தும் தொகுக்கப்பட வேண்டியவை என்பதால் தகவல் ஆகாது என்று தெரிவித்ததற்கும் , 08.09.09 அன்று அழைப்பாணை அனுப்பி இருந்தும் இவ்வாணையத்தின் விசாரணைக்கு வராததற்கு உரிய விளக்கம் கேட்டிருந்தும், உரிய விளக்கத்துடன் இவ்வாணையத்தின்

விசாரணைக்கு வராததற்கும் தகவல் உரிமைச் சட்டப் பிரிவு **20(1)–ன்** கீழ் ஏன் பொதுத் தகவல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான விளக்கத்தைப் பெற்று இவ்வாணை பெறப்பட்ட ஒரு மாதத்திற்குள் இவ்வாணையத்திற்குத் தெரிவிக்குமாறு **ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சென்னை** கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 30.09.09** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**( சு. மோகன தாஸ் )**
**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்ண் 9479/09</u>**

**பெறுநர்**
**ஆணையர்,**
**மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை,**
**சேப்பாக்கம்,**
**சென்னை– 600 005.**

**பொதுத் தகவல் அலுவலர்,**
**மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை**
**ஆணையரகம்,**
**சேப்பாக்கம்,**
**சென்னை– 600 005.**

**திரு. வி. அன்பழகன்,**
**தலைமை நிருபர் தினகரன்,**
**புது எண்.6, பழைய எண். 62,**
**மல்லியம் நரசிம்மன் நகர்,**
**பூந்தமல்லி,**
**சென்னை– 600 056.**